<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>MCOP. No.441/2019</u>

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ஆம் நாள் எ.சா.2 சாட்சி திரு.சுஜாஹரன் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சுஜாஹரன் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுக்கா | : |

<u>எ.சா.2 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிர்வாக அதிகார் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

TN 40 B 5162 வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் உண்மை நகல் எ.சா.ஆ.5 ஆகவும், 04.12.2025ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது ஓட்டுநர் ஆகியோர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு இரசீதுடன் அலுவலக நகல் எ.சா.ஆ.6 ஆகவும், 1ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் எ.சா.ஆ.7 ஆகவும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு அனுப்பிய அறிவிப்பின் திருப்பப்பட்ட கவர் அசல் எ.சா.ஆ.8 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்து சமயத்தில் விபத்து வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அடிபட்ட நபர் காப்பீடு நிறுவனத்தை பொருத்தவரை 3ம் நபர் என்றால் சரிதான். பாலிசி விதிமுறை மீறல் எதுவும் 3ம் நபர் கட்டுப்படுத்தாது என்றும், ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் தொகை செலுத்திவிட்டு உரிமையாளரிடம் தான் வசூல் செய்து கொள்ளும் உரிமை தான் உள்ளது என்றும், எனவே மனுதாரர்களுக்கு நாங்கள் தான் இழப்பீடு தர கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பாலிசி விதிமுறை மீறல் உள்ளதால் எங்கள் காப்பீடு நிறுவனம் இழப்பீடு தர கடமைப்பட்டவர்கள் அல்ல.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.